MCOP.298/2013 ம.சா.1. உமா க/பெ சங்கர்

17.10.2022 - குறுக்கு விசாரணை

விபத்து 2013 - ம் ஆண்டு நடந்தது தேதி நினைவில்லை. இந்த வழக்கு 2013ம் ஆண்டு என் கணவர் உயிருடன் இருந்தபோது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். என் கணவர் 05.08.2016 அன்று இறந்தார். விபத்தில் தனக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாக தான் என் கணவர் இந்த மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து என் கணவர் 3 மாதங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். என் கணவர் கூலி வேலை செய்து வந்தார். சி.எம்.சி. மருத்துவமனையில் என் கணவர் சிகிச்சை எடுத்துவந்தார். விபத்து நடந்த பிறகு என் கணவரை அரசு மருத்துவமனையில் சேர்க்கவில்லை. சி.எம்.சி மருத்துவமனையில் என் கணவர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ ரசீதுகள் அனைத்தும் தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் கூலி வேலை செய்த வந்த நிலையில் அவருக்கு எவ்வாறு சி.எம்.சி. மருத்துவமனையில் செலவு செய்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் என் அம்மா வீட்டில் செலவு செய்தார்கள். விபத்து நடந்தவுடன் என் கணவரை சி.எம்.சி. மருத்துவமனையில் சேர்த்து விட்டதால் அங்கிருந்து அவரை அரசு மருத்துவமனைக்கு மாற்றி இலவசமாக சிகிச்சை அளிக்க இயலவில்லை. என் கணவர் முதலில் விபத்து நடந்தவுடன் 3 மாத காலம் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டபிறகு அவர் இறக்கும் வரையில் எத்தனை முறை மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் மாதா மாதம் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக சென்று வந்தோம் மேலும் இரண்டு முறை மருத்துவமனையில் தலா இரண்டு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து வந்தார். அவ்வாறு நடந்தது என் கணவர் இறப்பதற்கு சற்று முன்னர் ஆகும். சி.எம்.சி. மருத்துவமனையில் மட்டும் தான் என் கணவர் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும் வேறு எந்த தனியார் மருத்துவமனையிலோ அல்லது அரசு மருத்துவமனையிலோ என் கணவர் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். என் கணவர் என்ன காரணத்தினால் இறந்தார் என்று மருத்துவ சான்று எதுவும் உள்ளதா என்றால், அவர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்தார். என் கணவர் மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்த மறு நாள் இறந்ததால் அவரது இறப்பிற்கான காரணம் குறித்து மருத்துவ சான்று எதுவும் இல்லை. என் கணவரை மருத்துவமனையிலிருந்து எந்த காரணத்தினால் டிஸ்சார்ஜ் செய்து அனுப்பினார்கள் என்றால் விபத்து நடந்த பிறகு அவரது தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு மண்டை ஓடு பொருத்தப்பட்டது. அவ்வாறு பொருத்தப்பட்ட மண்டை ஓடானது 3 வருட காலத்திற்கு சரியானால் சரியானபிறகு மீண்டும் அறுவை சிகிச்சை செய்ப்பட்டு பொருத்தப்பட்ட மண்டை ஓட்டை மீண்டும் எடுக்க வேண்டுமென்று சொல்லிதான் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது அவ்வாறு அறுவை சிகிச்சை செய்யும்போதே 3 வருட காலம் வரை என்கணவரின் உயிருக்கு உத்தரவாதம் தர முடியாது என்பதன் அடிப்படையில்தான் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவ்வாறு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான அறிக்கை மற்றும் ஸ்கேன் அறிக்கை ஆகியவை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அவ்வாறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டில் இறந்தபிறகு அவரது உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டதா என்றால் அவ்வாறு செய்யப்படவில்லை. நான் சொல்வதுபோல் என் கணவரின் இறப்பு விபத்து நடந்து 3 வருடங்கள் கழித்து விபத்தின் பாதிப்பினால் தான் ஏற்பட்டது என்று சொல்வது தவறானது

என்றும் மரணம் வேறு காரணத்தினால் ஏற்பட்ட இயற்கையான மரணம் என்றும் அதை மறைத்து இறப்பிற்கு விபத்து தான் காரணம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் சி.எம்.சி.யில் மருத்துவசிகிச்சை எடுத்து முடித்த பிறகு அவருக்கு டிஸ்சார்ஜ் சம்மரி வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரியில் என்கணவர் அளவுக்கு அதிகமாக குடிபோதையில் பயணம் செய்ததால் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் அதனால் தான் அந்த டிஸ்சார்ஜ் சம்மரியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது மதியழகன் என்பவர் வாகனத்தை ஓட்டி என் கணவர் சங்கர் பின்னால் அமர்ந்து வந்தபோது விபத்து ஏற்பட்டதுஎன்றால் சரிதான். வாகனத்தை ஓட்டிய மதியழகனுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை காலில் மட்டும் லேசான சிராய்ப்பு காயங்கள் இருந்தது. என் கணவர் தான் பின் பக்கமாக விழுந்ததால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. வாகனத்தை விபத்துசமயத்தில் ஓட்டிய மதியழகனுக்கு ஓட்டுனர் உரிமம் மற்றும் வாகனத்திற்கான பதிவு சான்று இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது மதியழகன் மற்றும் என் கணவர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டி பயணம் செய்ததால் ஏற்பட்டது என்றும் அதற்கு லாரி ஓட்டுனரும் காப்பீடு நிறுவனமும் எந்தவிதத்திலும் பொறுப்பாகாது என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு விபத்தில் ஏற்பட்ட கொடுங்காயத்திற்கான இழப்பீடு மட்டும்தான் கோர முடியும் என்றும் அவர் இறந்ததற்கான இழப்பீடு தொகையை கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு கூலி வேலை என்பதால் நிரந்தர வருமானம் கிடையாது என்று சொன்னால் சரிதான். என் கணவரின் வயது, மற்றும் மாத வருமானம் குறித்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் சரியாக நினைவில்லை. நான் இம்மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகமானது என்றும் காப்பீடு நிறுவனத்தை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.